ASSOCIATION FOR FRIEENDSHIP AND LOVE (AFRIEL)

**ஊடக அறிக்கை**

**நல்லிணக்கத்திற்கான தேசியளவில் மேற்கொள்ளப்படும் இளைஞர் பயணம்**

**30.ஐப்பசி.2015**

வடமாகணத்தில் உள்ள ஓர் இளைஞர் வலையமைப்பு நிறுவனமான அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பின் (யுகுசுஐநுடு) ஏற்பாட்டில் அனைத்து சமூகத்தின் நல்லிணக்கத்தினையும் வலியுறுத்தி இலங்கை முழுவதும் ஓர் வீதி நாடக ஆற்றுகையை நிகழ்த்தி வருகின்றது. இந்தத் தெரு வெளிஅரங்க ஆற்றுகையானது வடக்கு கிழக்குமாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் ஒன்றிணைவிலும்,தொண்டர் சேவையாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இந் நாடகத்தின் மூலம் யுத்தத்தில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுடன் உறவாடவும் அவர்களினூடக அந்த உணர்வுகளை புரிந்து கொள்வதற்குமான சந்தர்ப்பத்தை உருவாக்குவதாக அமைகிறது. கடந்த 11 நாட்களில் இந்தவீதிநாடகமானதுகிளிநொச்சி,முல்லைத்தீவு,திருகோணமலை,மட்டக்களப்பு,பதுளை, நுவரெலியா, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் ஆற்றுகைசெய்யப்பட்டு, இன்றுவவுனியாவில் நிகழ்தப்பட்டது.

நவம்பர் மாத நடுப்பகுதியில் இந்த நாடகமானது சிங்கள சமூகத்தினை நோக்கி கண்டி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மாத்தளை, காலி, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, குருணாகல், போன்ற மாவட்டங்களில் உள்ள மக்களுடன் ஓர் புரிந்துணர்வு அடிப்படையில் கலந்துரையாடலை ஏற்படுத்தும் முகமாக இடம்பெறவுள்ளது. வடக்கு கிழக்கு மலையகப் பிரதேசங்களில் மக்கள் வெளிப்படுத்தியஉணர்வுகளுடனும் இந்தமக்களின் எண்ணப்பாடுகளுடனும் சிங்கள சமூகத்தினை நோக்கி நகரவுள்ளது.

30 நிமிட நேரத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள இந் நாடகஆற்றுகையுடன்அடுத்த 30 நிமிடமளவுசிவில் சமூகத்தினரின் பங்களிப்புடனும் கலந்துரையாடலுடனும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நாடகம் 4 கட்டமைப்புக்களைக் கொண்டமைகின்றது. இதில் முதல் கட்டமாகஒருபகுதியில் உள்ள மக்கள் கூட்டத்தின் இனப் பிரச்சனைக்குகாரணமாகவுள்ளவிடயத்தினைவெளிப் படுத்தும் வகையில் அமைகிறது. இரண்டாவது கட்டத்தில் வடக்கு கிழக்குமலையகமக்களிற்குள்ளநெருக்கடியானபிரச்சனைகளைபேசுவதாகக் காணப்படுகின்றது. மூன்றாவதுபகுதியில் மக்கள் தாம் பாராளுமன்றத்திற்குதெரிவுசெய்யும் அரசியல் தலைவர்களினால் முறையான தீர்வு கிடைக்கப் போவதில்லை என்ற உணர்வினை வெளிப்படுத்துகின்றது. இறுதியில் சிவில் சமூகத்திற்குள் உள்ள பலவீனங்களைக் கண்டு இன மத பேதங்களைக் கடந்து ஓர் புரிந்துணர்வுள்ள நிலைக்கு உந்தப்படும் வகையில் நிறைவடைகிறது.

துரதிஸ்டவசமாகபோரினால் பாதிக்கப்பட்டஓர் இளையசமூகத்தின் இவ் நல்லிணக்கச் செயற்பாட்டிற்கு இப்பொழுது பொலிஸ் மற்றும் இரணுவத்தினர் இடையூறு செய்கின்றனர். முல்லைத்தீவு,கேப்பாப்பிலவு,தண்ணீர்முறிப்பு,கிளிநொச்சி,கந்தபுரம் மற்றும் மன்னார் அடம்பன் பொதுச்

Postal Address: No.28, Kailasa Pillayar Road, Nallur, Jaffna, Sri Lanka.
Contact No: +94(0)214927336 / +94(0)214927336
Fax: +94(0)212216088
Email: afrielangelofyouth@gmail.com
Website: https://www.afrielyouthnetwork.org
Re No. GL 2314

ASSOCIATION FOR FRIEENDSHIP AND LOVE (AFRIEL)

சந்தைப் பகுதியில் இவ்வாறானசவால்களைஎதிர் நோக்கியிருந்தோம்.இந்தநாடகநிகழ்வினைசெய்கின்ற சந்தர்ப்பத்தில் எமது குழுவினை விசாரனை செய்தனர். புகைப்படம் மற்றும் வீடியோப் பதிவினைசெய்ததுடன் எமதுகுழுவினரின் தனிப்பட்ட சுய விபரங்களைக் குறித்துக் கொண்டனர். இவ்வாறான செயற்பாட்டிற்கு நாம் எமதுகண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது சமூகத்தில் உள்ள பிரச்சனைகளை வெளிப்படுத்தவும் இனங்களுக்கிடையே பரஸ்பரத்தை ஏற்படுத்தவும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் அனுமதி பெறவேண்டியதில்லை என்பதனை உறுதியாக இங்கு பதிவு செய்கிறோம்.

போரினால் பாதிக்கப்பட்டமக்களின்பிரச்சனைகளுக்குத் தீர்வு காணாமல் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதுபெரும் சவால் என்பதும,; எமதுசமூகத்தின் சுதந்திரச் செயற்பாட்டிற்கு இவ்வாறான இடையூறுகள் உள்ளது என்பதையும் அரசிற்கு உறுதியாக தெரியப்பத்துகின்றோம். தற்பொழுது மீள் திருத்தம் செய்யப்படுகின்ற அரசியல் அமைப்பில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும் என்பதுடன் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்க வேண்டும் என நாம் விரும்புகின்றோம்.

வடக்கு சமூகத்தின் பிரச்சனைகளுக்கு நாம் சேவையாற்றுவதற்கு இவ் அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கும் என நாம் நம்புகின்றோம். இவ்வாறான பிரச்சனைகளுக்கு மத்தியிலும் இச் செயற்பாட்டில் நான்காயிரத்துக்கும் அதிகமான மக்கள் இன மத மொழி வேறுபாடின்றி பங்கு கொண்டிருந்தனர். ஜனவரி 8ம் திகியின் பின் இவ் அரசாங்கம் பார்த்தும் பாராமலும் உள்ளபலபிரச்சனைகளைநாம் பார்த்திருக்கின்றோம்.இந் நாடகசெயற்பாட்டின் மூலம் தமிழ் மக்களுக்கான ஒரு நீதியைத் தேடிக் கொள்ளவும் ஏனைய இன மக்களுடன் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்குமான ஒரு வழி உருவாக்கப்படும் என நம்புகின்றோம். வடக்கு கிழக்குமற்றும் மலையகமக்கள் எம்முடன் பகிர்ந்துகொண்ட விடயங்கள் மற்றும் அவர்களுடைய எண்ணக்கருக்களை நவம்பர் நடுப்பகுதியில் இவ் நாடகத்தின் மூலம் நேரடியாக சிங்கள மக்களுடன் உரையாடவுள்ளோம்.

எமக்கு வருகின்ற தடைகள் மற்றும் சவால்களுக்கு முகம் கொடுத்து வடக்கு கிழக்கு மற்றும் அனைத்து பகுதிகளிலும் உள்ள மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு தேடும் முகமாக அனைவரையும் இணைத்து எதி;ர்வரும் காலங்களில் செயற்படவுள்ளோம்.



ரவீந்திர டீ சில்வா
அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பு அங்கத்தவர

Postal Address: No.28, Kailasa Pillayar Road, Nallur, Jaffna, Sri Lanka.
Contact No: +94(0)214927336 / +94(0)214927336
Fax: +94(0)212216088
Email: afrielangelofyouth@gmail.com
Website: https://www.afrielyouthnetwork.org

Re No. GL 2314